# தமிழ் வளர்ச்சிக் கழகம்
# செய்தி மின்மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும்

2: 1 சனவரி 2026


## உங்களுடன்

வணக்கம்.

அறங்காவல் குழுத் தலைவர்
மேனாள் ஒன்றிய அமைச்சர்
மாண்பமை திரு **ப. சிதம்பரம்** அவர்களும்
அறங்காவல் குழு உறுப்பினர்
மதிப்பிற்குரிய திரு **எம்.ஏ. முஸ்தஃபா** அவர்களும்
ஆளுக்குப் பத்து இலட்சம் வழங்கிப் புரவலர் ஆகித்
தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்
இந்த ஆண்டைத்
தொடங்கி வைத்திருக்கிறார்கள்!

நாடகவியல் நூல் வெளியீடும்
சேர்ந்துகொண்டதால்
இந்த ஆண்டின்
தமிழ் வளர்ச்சிக் கழகப் பணிகள்
புத்துணர்ச்சியோடு தொடங்கியிருக்கின்றன.

மூன்று மாதத்திற்கு ஒரு நூல் எனும் முறையில்
தமிழ் வளர்ச்சிக் கழகப் பணிகளைக்
காலக் கணக்கில் முடுக்கிவிட்டிருக்கிறார்
அறங்காவல் குழுத் தலைவர்!

காலத்திற்கும்
கணக்கு இருக்கிறது!
இறந்த காலம்
நிகழ் காலம்
எதிர் காலம்!
காலம் இறக்குமா?
நாம் வாழ்ந்து கொண்டிருப்பதால்
நாம் கடந்துவந்த காலம்
இறந்து போகிறதா?
இறந்த காலம் என்பதை விடக்
கடந்த காலம் சரியாக இருக்கும் போல!

நாம் கடந்து வந்த காலம்
நம்மைக் கடந்துபோன காலம்!
அப்படியானால்
காலத்தை நம்மால்
வாழவைக்கமுடியுமா?
வாழவைத்திருக்கிறார்கள்
வாழவைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

திருவள்ளுவர் திருக்குறளால்
தான் வாழ்ந்த கடந்த காலத்தை இப்போதும்
வாழவைத்துக் கொண்டிருக்கிறார்தானே!

காலத்தை வாழவைக்க அவர்
கண்டறிந்த வழிமுறையையும்
சொல்லி வழிகாட்டியிருக்கிறார்!

“வீழ்நாள் படாஅமை நன்றாற்றின்”
காலம் வாழும் போல!

தஞ்சை பெரிய கோயிலில்
காலத்தை மட்டுமன்றித்
தன்னையும் வாழவைத்துக்கொண்டிருக்கிறார்
இராசராசன்!

இதுவரை வந்தவர்கள் மட்டுமன்றி
இனிமேல் வருகிறவர்களும் தாம் வாழவைத்த
காலத்தைக் காப்பாற்றுவார்கள் என்று
இராசராசன் நம்பியிருக்கலாம்
அதுவும் நடந்துகொண்டிருக்கும்தானே!

அதே போலத்
தமிழ் வளர்ச்சிக்கழகத்தைத்
தோற்றுவித்தவர்களும் நம்பியிருப்பார்கள்தானே!
தமிழ் வளர்ச்சிக் கழகத்தைக் காலத்தோடு சேர்த்து
வாழவைக்கப் புரவலர்களும் அறிஞர்களும்
வந்துகொண்டிருப்பார்கள் என்று
எண்ணியிருப்பார்கள்தானே!

அவர்கள் எண்ணம்
தமிழ் வளர்ச்சிக்கானது என்பதால்
காலம் அவர்கள் நம்பிக்கையைக்
கைவிடவில்லை என்பதற்கு
நாடகவியல் நூல் வெளியீட்டுவிழா சாட்சி!

விழா சிறக்க உதவிய
பேராசிரியர்கள் உரு இராசேந்திரன்
ஒப்பிலா மதிவாணன், மணிகண்டன், ஆண்டவர்
மற்றும் திருவையாறு துரை நாகராசன்
நன்றிக்குரியவர்கள்!

தமிழ் வளர்ச்சிக் கழகம்
மூன்று மாதத்துக்கு
ஒரு நூல் என்று
காலத்தை வாழவைக்கத்
தன்னால் முடிந்த அளவில்
முயற்சி செய்கிறது!

அடுத்த நூலாக வெளிவரவுள்ளது
**தமிழியல் கலைக்களஞ்சியம்**!

வாழும் காலத்தை
வாழவைக்கும் முயற்சியில்
தொடர்பில் இருப்போம்
தொடர்ந்து…

அன்புடன்
ம.ரா.



# நாடகவியல் களஞ்சியம் வெளியீட்டு விழா

பேராசிரியர் மு. இராமசுவாமி அவர்கள் தொகுப்பில் தமிழ் வளர்ச்சிக் கழகம் உருவாக்கியுள்ள நாடகவியல் களஞ்சியம் எனும் நூலின் வெளியீட்டு விழா 8.1.2026 வியாழன் மாலை சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. நாடாளுமன்ற மேலவை உறுப்பினரும், மேனாள் ஒன்றிய அமைச்சரும், தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவல் குழுத் தலைவருமான திரு ப.சிதம்பரம் அவர்கள் இந்நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். 'சிறை'–திரைப்படத்தின் இயக்குநர் திரு சுரேஷ் ராஜகுமாரி அவர்களும் சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ரீட்டா ஜான் அவர்களும் நூலைப் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கினர். முன்னதாகச் சென்னைப் பல் கலைக்கழகத் துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர் முனைவர் ஆம்ஸ்ட்ராங் அவர்கள் முன்னிலையுரை வழங்கினார்.

அறங்காவல் குழு உறுப்பினர் திரு முஸ்தபா அவர்கள் அறங்காவல் குழுத் தலைவரிடம் ரூ. 10 இலட்சத்திற்குக் காசோலை வழங்கிப் புரவலரானார். அவரைப் பாராட்டி அவருக்குப் பொன்னாடை அணிவித்து அறங்காவல் குழுத் தலைவர் சிறப்பித்தார்.

நூலாசிரியர் மு. இராமசுவாமி, நூலின் முகப்பு அட்டையை வடிவமைத்த ஓவியர் ட்ராட்ஸ்கி மருது ஆகியோரைப் பாராட்டும் வகையில் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்துத் தமிழ் வளர்ச்சிக் கழகத் துணைத்தலைவர் திரு கிருஷ்ண சந்த் சோர்டியா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் வரவேற்புரையும், நூலாசிரியர் முனைவர் மு. இராமசுவாமி அவர்கள் நூல் அறிமுக உரையும், முனைவர் உரு. இராசேந்திரன் அவர்கள் நன்றியுரையும் வழங்கினர்,



# சொல் புதிது – 9

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் *சொல் புதிது* என்னும் திட்டத்தின் ஒன்பதாவது கூட்டம்
தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 21.01.2026 புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெற்றது.
இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பெற்ற சொற்கள் வருமாறு:

| வ.எண் | ஆங்கிலம் | தமிழ் | வ.எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|---|---|
| 1 | Outplay (verb) | விஞ்சியாடு-தல் | 15 | Phantom job | பொய்ப் பணி |
| 2 | Autopilot | தானோட்டி | 16 | Fake job | பொய்ப் பணி |
| 3 | Air (verb) | வானலை ஏற்று-தல் | 17 | Soft launch | பகட்டிலாத் தொடக்கம் |
| 4 | Menorah | யூத எழுகிளை விளக்கு | 18 | Brain rot | மூளை மழுங்கல் |
| 5 | Money plant | வளமைக் கொடி | 19 | Digital detox | இணையச் சுமை விடுவிப்பு |
| 6 | Hybrid war | நுட்பக் கலவைப் போர் | 20 | Rizz | கவர்ச்சி |
| 7 | Baby corn | சோளப் பிஞ்சு | 21 | Vax | தடு மருந்து/தடுப்பு மருந்து |
| 8 | Baby cell | முதிரா உயிரணு | 22 | Crap | அவையல் கிளவி/செயல் |
| 9 | Eco Park | சூழலியல் பூங்கா | 23 | Ostracism | ஒதுக்கிவைப்பு |
| 10 | Wild card | பதிலி வாய்ப்பு | 24 | Puny | சின்னஞ்சிறு |
| 11 | Kakistocracy | தகுதியிலார் ஆட்சி | 25 | Solipsism | செருக்கு |
| 12 | Hallucination | காட்சிப் பிழை | 26 | Xenophile | அயல் மோகம் |
| 13 | Deepfake | பொய்க் காட்சி | 27 | Roomie | உடன் தங்குநர் |
| 14 | Ghost job | பொய்ப் பணி | | | |

*எந்தெந்த ஆங்கிலச் சொற்களுக்கு நிகராகத் தமிழில் சொற்கள் உருவாக்கப்பட வேண்டுமோ அந்த ஆங்கிலச் சொற்களை எவரும் அனுப்பலாம்.*


# நல்வாழ்த்து



தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அறங்காவல் குழுத் தலைவர் திரு **ப. சிதம்பரம் M.P.** அவர்கள் அகவை 80 எய்தியதை முன்னிட்டு 20.12.2025 மதியம் சென்னை ITC Grand Chola Hotelஇல் அவருடைய மகன் திரு **கார்த்தி சிதம்பரம் M.P.** அவர்கள் விருந்து அளித்தார். அதில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் கலந்துகொண்டு திரு **ப. சிதம்பரம்** அவர்களுக்கு நல்வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



# பாராட்டு



மதுரையில் நடைபெற்ற தி ரைஸ் – சங்கம் 5
தமிழ்த் தொழிலதிபர்கள் மாநாட்டில்
தமிழ்ப் பல்கலைக்கழகத்தின்
மேனாள் துணைவேந்தரும்
தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவருமான
முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு
வாழ்நாள் தமிழ்த் தவம் விருது வழங்கப் பெற்றுள்ளது.
அன்னாருக்கு மகிழ்ச்சியையும் பாராட்டையும்
வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறது தமிழ் வளர்ச்சிக் கழகம்.








தமிழ் வளர்ச்சிக் கழகத்தில்
21.01.2026 மாலை 3.30
மணிக்கு நடைபெற்ற
சொல் புதிது கூட்டம்.

⇦



## ரூ. 750 விலையுள்ள
## நாடகவியல் களஞ்சியம்
## ரூ. 500க்குக் கிடைக்கும்.



## நூல் விற்பனை (50% கழிவுடன்)

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அனைத்து நூல்களும்
(நாடகவியல் களஞ்சியம் நீங்கலாக)
50% சிறப்புக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.

தொடர்புக்கு:

**தமிழ் வளர்ச்சிக் கழகம்**
மணிக்கூண்டுக் கட்டடம், சென்னைப் பல்கலைக்கழக வளாகம்
சேப்பாக்கம், சென்னை 600 005
தொலைபேசி: 044-25365440
இணைய வலைத்தளம்: www.tamilvk.org
மின்னஞ்சல்: tamilvalarchikazhagam2024@gmail.com